## (எ) விலை வாசிகளும் கூலிகளும்

**விலைகள்**

1966 ஆம் ஆண்டில் நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஆராயும் இக் குறிப்புரை, குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படும் நுகர்வோர் விலைக் குறிகாட்டியை ஆதாரமாகக் கொண்டது. இக் குறிகாட்டியில் உள்ள இரண்டு குறைபாடுகள் பற்றிச் சென்ற ஆண்டு அறிக்கையிற் கூறப்பட்டுள்ளது. அவையாவன:-

(அ) கொழும்பு நகரில் உள்ள தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பங்களின் வாழ்க்கைச் செலவின் மாற்றங்களை அளவிடுவதற்காக அமைத்த இக் குறிகாட்டியைக் கொண்டு விலைகளின் முழுமையான மாற்றங்களை ஆராய முயலப்படுதல்.

(ஆ) கடந்த பதினாறு வருட காலத்திலே தொழிலாளர் வர்க்கத்தின் நுகர்ச்சித் தன்மை மாறுபட்டிருக்கக் கூடுமெனினும் இக் குறிகாட்டியிலுள்ள ஒவ்வொரு பொருட்களுக்குமான அளவுப் பிரமாணங்கள் இற்றைவரை திருத்தியமைக்கப்படவில்லை.

அன்றியும் பொருட்களின் நிரம்பலில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளின் பயனாகக் கட்டுப்பாட்டுச் சந்தைகளுக்கும், வெளிச் சந்தைகளுக்கும் இடையிலுள்ள அன்றாட முக்கியத்துவம் காலத்திற்குக் காலம் தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும் நிலைமை, இக் குறிகாட்டியின் மீது நம்பிக்கை வைப்பதை மேலும் தளர்த்துகின்றது. இக் குறிகாட்டி நம்பிக்கையானதாக அமைக்கப்படவேண்டுமாயின் ஒரு பொருளின் விலையை அறிவதற்குப் பல்வேறு சந்தைகளிலுமுள்ள விலைகளை ஒன்றாகத் தொகுப்பதற்கு உபயோகிக்கும் அளவுப் பிரமாணங்கள் அடிக்கடி திருத்தியமைக்கப்படவேண்டும். அப்படித் திருத்தி அமைப்பது எப்பொழுதும் இலகுவானதல்ல.

அட்டவணை 2 (எ) 1, 1957 ஆம் ஆண்டிலிருந்து இக் குறிகாட்டியினதும், அதன் உப குறிகாட்டியினதும் ஏற்றவிறக்கங்களைக் காட்டுகின்றது.

### அட்டவணை II (எ) 1

### கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டி

**(அடிவருடம் 1952=100)**

| வருடம் | சகல விடயங்களும் | பொருட்களின்படி | | | | | துறைகளின்படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உணவு | உடை | எரி பொருள் விளக்கு | வாடகை | பல்வகைப் பொருட்கள் | உள்நாட்டுத் தொகுதி | இறக்குமதித் தொகுதி | ஏற்றுமதித் தொகுதி |
| 1957 ... | 102·8 | 104·9 | 84·4 | 97·3 | 101·5 | 106·9 | 104·9 | 98·1 | 126·8 |
| 1958 ... | 105·0 | 105·8 | 87·5 | 101·0 | 101·5 | 113·1 | 109·2 | 97·0 | 135·0 |
| 1959 ... | 105·2 | 104·7 | 92·1 | 102·4 | 101·5 | 115·3 | 108·0 | 97·1 | 158·1 |
| 1960 ... | 103·5 | 100·8 | 95·1 | 102·7 | 101·5 | 117·5 | 108·9 | 93·7 | 138·4 |
| 1961 ... | 104·8 | 99·8 | 103·9 | 104·4 | 101·5 | 122·8 | 112·3 | 94·6 | 119·1 |
| 1962 ... | 106·3 | 100·9 | 108·2 | 105·6 | 101·5 | 124·9 | 113·9 | 96·7 | 118·8 |
| 1963 ... | 108·8 | 103·0 | 118·2 | 103·0 | 101·5 | 126·6 | 113·4 | 102·5 | 117·7 |
| 1964 ... | 112·2 | 106·4 | 127·2 | 103·2 | 101·5 | 129·3 | 116·7 | 106·6 | 115·8 |
| 1965 ... | 112·5 | 107·3 | 126·8 | 100·7 | 101·5 | 128·3 | 116·4 | 106·4 | 127·2 |
| 1966 ... | 112·3 | 109·1 | 117·0 | 95·9 | 101·5 | 127·3 | 116·8 | 105·4 | 127·6 |

மூலங்கள் : குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி.

1961 ஆம் ஆண்டிலிருந்து கூர்மையாக அதிகரித்துக் கொண்டு வந்த ''சகல விடயங்களும்'' என்பதன் குறிகாட்டி 1965 ஆம் ஆண்டில் அடைந்த நிலையான தன்மையை 1966 ஆம் ஆண்டிலும் நிலைநாட்டியது. உண்மையில் இக் குறிகாட்டி 1965 ஆம் ஆண்டிலிருந்து 1966 ஆம் ஆண்டில் 0.18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ் வீழ்ச்சி 1962 இல் இருந்து 1963 லும், 1963 இல் இருந்து 1964 லும், 1964 இல் இருந்து 1965 லும் ஏற்பட்ட சதவீத அதிகரிப்புக்களாகிய முறையே, 2. 35, 3. 13, 0. 27 ஆகியவற்றுடன் ஒப்பிடத்தக்கது.

மேற்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியின் விபரங்கள், கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்ட விலை மாற்றங்களில் ஒரு சில அம்சங்களைத் தெரிவிக்கின்றன. 1966 ஆம் ஆண்டில் வெவ்வேறு பொருட்டொகுதிகளின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஒப்பிட்டு நோக்கும் பொழுது, உணவுப் பொருட்டொகுதியில் மட்டுமே ஓர் அதிகரிப்புக் காணப்படுகின்றது. ஏனைய பொருட்டொகுதிகள் யாவற்றிலும் (கட்டுப்பாடு செய்யப்பட்ட வாடகைகளின் அடிப்படையிற் கணிக்கப்படும் வாடகைத் தொகுதியைத் தவிர) சராசரி விலைகளின் போக்கு வீழ்ச்சியுறுவதொன்றாகவே இருந்தது. 1965 ஆம் ஆண்டின் போதும் இதே தன்மையான போக்குத்தான் காணப் பட்டு விலைகள் வீழ்ச்சியுற்ற அளவுகளில் மட்டும் சில வேற்றுமைகள் இருந்தன. 1962ஆம் ஆண்டு வரை நுகர்வோர் விலைகளைப் பொதுவாகக் கீழ் நோக்கி இழுத்துக் கொண்டிருந்த உணவுப் பொருட்டொகுதிக் குறிகாட்டி பின்னுள்ள வருடங்களிற் கணிசமாக அதிகரித்தது.

நுகர்வோரின் உணவுப் பொருட்களின் சராசரி விலை 1966 ஆம் ஆண்டில் 1.7 சதவீதத்தால் அதிகரித்து, 1965 ற்குரிய 107.3 புள்ளிகளிலிருந்து 1966 இல் 109.1 புள்ளிகளுக்கு உயர்வுற்றதென இக் குறிகாட்டிகள் தெரிவிக்கின்றன. உணவுப் பொருட்டொகுதியில் கோதுமை மா, தேயிலைத் தூள், பால் உணவுகள், கறிச் சரக்குகள், வாசனைச் சரக்குகள், வெண்காயம், உருளைக் கிழங்கு, மரக்கறிகள், மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கருவாடு ஆகியவற்றின் விலைகள் கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்தன. விலையில் வீழ்ச்சியடைந்த பொருட்களாவன மீன், வெண்ணெய், பாற்கட்டி, முதலியனவாகும். 1966ஆம் ஆண்டிற் சாதாரண நுகர்ச்சிப் பொருட்களான மிளகாய், வெண்காயம், கொத்தமல்லி, பால்மா ஆகியவைகளிற் காலத்திற்குக்காலம் ஏற்பட்ட தட்டுப்பாடுகளினால் அவற்றின்வெளிச் சந்தை விலைகளிற் கூர்மையான அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. அவற்றின் தட்டுப்பாடுகள் ஒவ்வொன்றும் குறைவுற்ற இறக்குமதிகளினால் ஏற்பட்டவையல்ல. உண்மையில் மீன் உற்பத்திப் பொருட்கள், பருப்பு வகைகள், மிளகாய், கறிச் சரக்கு வகைகள் போன்ற பொருட்களின் இறக்குமதிகள் கணிசமாக அதிகரித்திருந்தன. பாற் பொருட்கள் சம்பந்தமான வரையிற்கூடச் சில காலங்களில் மோசமான தட்டுப்பாடுகள் காணப்பட்டனவெனினும் 1966 ஆம் ஆண்டில் அவை இறக்குமதி செய்யப்பட்ட தொகை, 1965 ஆம் ஆண்டின் தொகையிலும் பார்க்கச் சிறிது கூடுதலானதாகவேயுள்ளது. எனவே இதிலிருந்து அறியக் கிடப்பது யாதெனில், உ ண வு ப் பொருட்களைச் சரிவர விநியோகிக்கும் முறை இவ் வருடத்திற் கைகூடவில்லையென்பதேயாகும்.

1965 ஆம் ஆண்டிற்கு முந்தைய பத்து வருட காலத்தில் வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி அதிகரிப்பதற்குப் பிரதான காரணியாகவிருந்தது, ஆடைகளின் நிதானமான விலை அதிகரிப்பேயாகும். எனினும், 1965 ஆம் ஆண்டில் ஆடைகளின் விலை முந்தைய வருடத்தில் நிலவிய விலைகளிலும் பார்க்க ஓரளவு வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டது. 1966ஆம் ஆண்டிலும் இவ்விலைகள் தொடர்ந்து வீழ்ச்சியுற்றன. இவ்வீழ்ச்சி 7.7 சதவீதமாகும். இவ் வருடத்திற் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் தனது ஆடைகளின் விலைகளை உயர்த்தியதாயினும், இந் நிலையம் தனது சொந்த விற்பனவு நிலையங்களினூடாகவும், தனியார் துறை வர்த்தக நிலையங்களினுடாகவும் விற்பனைக்கு வெளியிட்ட ஆடைகளின் மொத்தத் தொகை ஏராளமாயிருந்தமையால் வெளிச் சந்தைகளிலுள்ள விலைகளைக் கணிசமான அளவால் வீழ்த்துவதற்குப் போதுமானதாக இருந்தது. ஆடைகளின் இறக்குமதி விலையும் இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தது.

எரிபொருள் விளக்குத் தொகுதியின் குறிகாட்டி 5.7 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. இவ் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் மண்ணெண்ணெயின் மீதுள்ள இறக்குமதித் தீர்வை முற்றிலும் நீக்கப்பட்டதன் விளைவாக அதன் விலை குறைவுற்றமையேயாகும். இறக்குமதித் தீர்வை நீக்கப்பட்டமை 1965 ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாயினும், குறைந்த விலையுள்ள மண்ணெண்ணெ 1965 இன் இறுதிப் பகுதியிற்றான் கிடைக்கக் கூடியதாயிருந்ததற்கெதிரா்க, 1966 இல் அது வருடம் முழுவதும் கிடைக்கக் கூடியதாயிருந்தது.

பல் வகைப் பொருட்டொகுதியுள்ள விடயங்களின் சராசரி விலை சிறிது வீழ்ச்சியுற்றது. இத்தொகுதியைச் சேர்ந்த விடயங்களில் வீட்டுப்பாவனைப் பொருட்கள், கல்வி, சிகையலங்காரம் ஆகியவற்றின் விலைகள் கூடுதலாக அமைந்தும், வெற்றிலை, பாக்கு, போக்குவரத்து ஆகியவற்றின் விலைகள் குறைவுற்றனவாக அமைந்தும் காணப்பட்டன. போக்குவரத்து விடயத்தின் விலை குறைவுற்றமை, சைக்கிள் ''ரயர்கள்'', ''ரியூப்புக்களின்'' விலைகள் இவ்வாண்டில் மேலும் வீழ்ச்சியடைந்தமையைப் பிரதிபலிக்கின்றது.

**வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியினுள் உட்படாத விலைகள்**

வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியினுள் வரும் விலைகளுக்குத் துணையாக, மத்திய வங்கி, கட்டட ஆக்கப் பொருட்கள், எண்ணெகள், வண்ணக் குழம்புகள், வீட்டுத் தேவைப் பொருட்கள் (தளவாடங்கள், தையல் இயந்திரங்கள், கலங்கள், கிண்ணங்கள் தட்டுக்கள் போன்ற பொருட்கள்), மோட்டார்த் துணைக் கருவிகள், மாற்றுறுப்புக்கள் வளமாக்கிகள் ஆகியனவற்றின் சில்லறை விலைகளைப்பற்றிய விபரங்களைச் சேகரித்துள்ளது. இவ் விபரங்களின்படி, எண்ணெகள், வண்ணக் குழம்புகள் என்ற தொகுதியின் விலைகள் மட்டும் குறைவுற்றுக் காணப்பட்டன. தெங்கு, இரப்பர், தேயிலை, ஆகியனவற்றிற்கான வளமாக்கிகளின் நம்பிக்கையான விலை 2 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. இவ்வாண்டின் போது கட்டட ஆக்கப் பொருட்களிற் காலத்திற்குக் காலம் தட்டுப்பாடுகள் நிலவியதைத்தொடர்ந்துஅவற்றின் விலைகள் பிரமாண்டமான மட்டத்திற்கு அதிகரிக்க நேரிட்டது.

**கூலிகள்**

அரசாங்க ஊழியர்களுக்கும், கூலி நிர்ணய சபை வாய்ந்த தொழில்களிலுள்ள தொழிலாளர்களுக்கும் மட்டுமே கூலிவீதக் குறிகாட்டிகள் உள்ளன. அரசாங்க ஊழியர்களுக்கும், பாடசாலை ஆசிரியர்களுக்குமான கூலி வீதங்கள் 1958 ஆம் ஆண்டு முதல் மாற்றமின்றி இருந்தன, என்பதை அட்டவணை II (எ) 2 காட்டுகின்றது. வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி சிறிது வீழ்ச்சியுற்றமையால், அவர்களின் மெய்க்கூலி வீதங்கள் 1966 ஆம் ஆண்டின்போது அதிகரித்தன.

**அட்டவணை II (எ) 2**

**அரசாங்க ஊழியர்களுக்கான கூலிவீதக் குறிகாட்டி எண்கள்**

**(1952=100)**

| வருடம் | இலிகிதரும் தொழிற் பயிற்சி பெற்றோரும் | | சிறுசேவை ஊழியர் | | மத்திய அரசாங்க ஊழியர் (அ) | | அரசாங்க பாடசாலை ஆசிரியர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி |
| 1957 ... ... | 111·2 | 108·2 | 116·0 | 112·8 | 113·8 | 110·7 | 113·9 | 110·8 |
| 1958 ... ... | 122·3 | 116·5 | 130·4 | 124·3 | 126·7 | 120·7 | 117·4 | 111·8 |
| 1959 ... ... | 122·3 | 116·3 | 130·4 | 124·0 | 126·7 | 120·4 | 117·4 | 111·6 |
| 1960 ... ... | 122·3 | 118·2 | 130·4 | 126·0 | 126·7 | 122·4 | 117·4 | 113·4 |
| 1961 ... ... | 122·3 | 116·7 | 130·4 | 124·4 | 126·7 | 120·9 | 117·4 | 112·0 |
| 1962 ... ... | 122·3 | 115·0 | 130·4 | 122·6 | 126·7 | 119·2 | 117·4 | 110·4 |
| 1963 ... ... | 122·3 | 112·4 | 130·4 | 119·9 | 126·7 | 116·5 | 117·4 | 107·9 |
| 1964 ... ... | 122·3 | 109·0 | 130·4 | 116·2 | 126·7 | 112·9 | 117·4 | 104·6 |
| 1965 ... ... | 122·3 | 108·7 | 130·4 | 115·9 | 126·7 | 112·6 | 117·4 | 104·4 |
| 1966 ... ... | 122·3 | 108·9 | 130·4 | 116·1 | 126·7 | 112·8 | 117·4 | 104·6 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) இலிகிதர், தொழிற் பயிற்சி பெற்றோர், சிறு சேவை ஊழியர் ஆகியோரை இணைத்துக் கணித்த குறிகாட்டி.

கூலி நிர்ணய சபை வாய்ந்த தொழில்களில் உள்ள தொழிலாளர்களின் குறைந்த பட்சக் கூலி வீதக் குறிகாட்டிகள், அட்டவணை II (எ) 3இல் காட்டப்பட்டுள்ளன. இவ்வாண்டின் போது கைத்தொழிலிலுள்ள தொழிலாளர்களுக்கான கூலி வீதக் குறிகாட்டி அதிகரித்திருக்கையில், விவசாயத் தொழில்களிலுள்ள தொழிலாளர்களுக்கான கூலி வீதக் குறி காட்டி மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும் இவர்களின் மெய்க்கூலி விகிதக் குறி காட்டி அதிகரித்தது. வணிகத் துறையிலுள்ள கூலி நிர்ணய சபை வாய்ந்த தொழிலாளர்களையும் உள்ளடக்கிய மெய்க் கூலிகளின் முழுக் குறிகாட்டி, பணக் கூலிகளில் ஒரு வீழ்ச்சியேற்பட்டிருந்த பொழுதும், அதிகரித்துள்ளது.

### அட்டவணை II (எ) 3

### கூலி நிர்ணய சபையிலுள்ள தொழில்களில் உள்ள தொழிலாளர்களின் கீழ்மட்டக் கூலிவீதக் குறிகாட்டி எண்கள்

( 1952 = 100 )

| வருடம் | விவசாயத்தொழிலாளர் | | கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளர் | | சகலகூலி நிர்ணயசபை வாய்ந்த தொழில்களிலுமுள்ள தொழிலாளர்கள் (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | கீழ்மட்டக் கூலிவீதக் குறிகாட்டி | மெய்க்கூலி வீதக் குறிகாட்டி | கீழ்மட்டக் கூலிவீதக் குறிகாட்டி | மெய்க்கூலி வீதக் குறிகாட்டி | கீழ்மட்டக் கூலிவீதக் குறிகாட்டி | மெய்க்கூலி வீதக் குறிகாட்டி. |
| 1957 ... | 108·7 | 105·6 | 104·5 | 101·5 | 107·8 | 104·7 |
| 1958 ... | 110·2 | 105·2 | 116·1 | 110·9 | 110·8 | 105·6 |
| 1959 ... | 110·2 | 104·8 | 128·8 | 122·4 | 112·3 | 106·7 |
| 1960 ... | 110·2 | 106·5 | 128·1 | 123·8 | 111·8 | 108·0 |
| 1961 ... | 110·7 | 105·6 | 128·4 | 122·5 | 112·3 | 107·2 |
| 1962 ... | 111·9 | 105·2 | 129·5 | 121·8 | 113·7 | 106·9 |
| 1963 ... | 113·3 | 104·2 | 130·9 | 120·3 | 115·2 | 105·9 |
| 1964 ... | 116·0 | 103·5 | 132·8 | 118·4 | 117·8 | 105·0 |
| 1965 ... | 116·3 | 103·4 | 132·8 | 118·0 | 118·2 | 105·0 |
| 1966 ... | 116·3 | 103·5 | 133·2 | 118·6 | 118·1 | 105·1 |

மூலங்கள்: தொழிற் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) விவசாயத் தொழிலாளர்கள், கைத்தொழில், வர்த்தகத் தொழிலாளர்கள் ஆகியோரை இணைத்துக் கணித்த குறிகாட்டி.